# உதயதாரகை—MORNING STAR.

PUBLISHED AT MANEPY, CEYLON, TWICE EACH MONTH, AT TWO SHILLINGS A YEAR, PAYABLE IN ADVANCE.

யகம். புத்தகம், சஞ்சிகை ரு.] ௲அாடுசம் ௵. பங்குனிமீ. ௴. ௳. வியாழக்கிழமை.—Thursday, February 13, 1851. [Vol. XI. No. 5.



TERMS OF THE PAPER.

For each copy—*two shillings a year*—PAYABLE IN ADVANCE.

To *Subscribers who receive the Paper by mail*, each copy, *exclusive of postage—four shillings a year.*

The difficulty of remitting small sums from distant places may be obviated by *five subscribers' uniting their subscriptions and remitting them together in a single pound note.*

The names of Subscribers will be published; and *all receipts of money* will be regularly acknowledged on the last page of the Paper.

*Subscribers on the Continent* may receive the paper at *four shillings a year*, their papers having to be sent by mail, and a postage of *one penny*, being *prepaid* on each. This is exclusive of Continental postage.

Agents are requested to receive no subscriptions except in conformity with the above terms.

Advertisements will hereafter be inserted at the rate of 3 shillings a square, and for less than a square 2 shillings. At this rate each advertisement will be published in two successive papers, if so desired by the advertiser.

*All Notices of Deaths and Marriages will be chargeable as Advertisements.*

Communications should be *post paid* to receive attention

JAFFNA—The Missionaries.
POINT PEDRO—E. L. Layard, Esq.
CATTAVELY—Mr. J. White
TRINCOMALIE—Rev. J. Walton.
COLOMBO—Messrs. P. B. Fernando & Son.
KANDY—Mr. L. Lawton.
TRANQUEBAR—Mr. Jeddidiah Adams.
BATTICALOE—Rev. J. Gillings.
MADURA—Rev. C. F. Muzzy.
ISLE OF FRANCE—Mr. George Cox.


## ஆத்ம கச்சவடம்.

உலகத்திலே பிரசித்தமான வியாபாரங்கள் அனேகம் நடக்கின்றன. அவற்றுள் இரகசிய வியாபாரமும் ஒன்றுண்டு. இதை நடப்பிக்கின்ற வியாபாரியோ மற்றெவர்களையும்போலவே, தினந்தோறும் உரோக்கவீடு, காசுக்கடை, கம்மாலை, கமம், கல்லூரி, களரி, தவறணை, பந்தயசாலை முதலான இடங்கள்தோறும் கவ்வையாய்த்திரிந்தும், பிரசித்தத்திலே வருகிறதில்லை. இவன் தொழிற்பெயரோ ஆத்ம வியாபாரி. இவன்பண்ணுங் கச்சவடமோ நரக பாதலத்துக்கடுத்தது. இவன் வியாபாரஞ்செய்யுஞ் சரக்கிற்குக்கொடுக்கிற கிரயம் அல்லது மற்றுஞ் சரக்கு, பலவகையும் பல தணிசுமாயிருக்கின்றது. ஒருமுறை முப்பது வெள்ளிக்காசுக்கு ஓர்ஆத்மாவை வாங்கினன். இன்னுங் குறைந்த கிரயத்துக்குஞ் சில ஆத்மாவைக் கொண்டிருக்கிறன். கணக்கற்ற திரவியமாகிய நகை நாணயத்துக்கும், பெயர், புகழ், இன்பானுபோகம் முதலியவற்றிற்குந் தங்கள் ஆத்மாவை விற்று நாசப்படுத்தினவர்களுடைய தொகையும் அற்ப சொற்பமல்ல. இப்படியே மனிதரை மயக்கி அழிவற்றதுங் கிரயத்துக்கு எட்டாததுமான ஆத்மாவை அழிவுள்ள சொற்ப கிரயங்களுக்கு மாற்றிக் கச்சவடஞ்செய்யும் வியாபாரியானவன் ஆத்ம சண்டாளனுகிய பசாசு என்னப்பட்டவனே.

மேலேகாட்டிய விதம் ஒரு ஆத்மா கிரயமாய் மாற்றப்பட்ட சரித்திரமொன்றை இதற்குத் திருட்டாந்தமாய் இவ்விடம் எடுத்துக் காட்டுவோம். எப்படியென்கில், பென்ஸ்ல்வேனியா என்னுந் தேசத்திற் கிழக்குப்பகுதியிற் தேவாலயமொன்றில், தேவ எழுப்புதலினுலே வெகுசனங் கூடியிருக்கையில், அவர்கள்மேல் ஆவியானவர் அருள் நிழலிட்டுக்கொண்டிருந்தார். அச்சமயத்திலே கிறிஸ்துவுக்கு அன்புள்ள தாசனுன ஒரு போதகர், ஆத்மாவினது முக்கியத்தைப்பற்றி மிகுந்த வேண்டுமையும் எழுப்புதலுமாய்ப் பிரசங்கித்து, பின்னுற்சொல்லப்படுந் திருட்டாந்தத்தையும் எடுத்துச்சொன்னர். கேட்டுக்கொண்டிருந்தவர்கள் இருதயம் உருகிக் கண்ணீர் விட்டார்கள். அவர் சொல்லிய திருட்டாந்த மாவது,

நமது பட்டினங்களிலொன்றில், வெகு திரவியமும் உலக நாட்டமுமுள்ள பல குடும்பங்கள் இருந்தன. அவற்றுளொன்றில், ஒரு தாய்க்கு ஏரேமகளாகப்பிறந்த செல்வியான வாலிபப் பெண்ணெருத்தி சில வருடங்களுக்கு முன் இருந்தாள். இவள் தனது பிராயத்துக்குத் தக்கதாய், நானுவகையான எடுப்புச் சாய்ப்புச் சிற்றின்பங்கள் யாவிலும் மயக்கங்கொண்டு நடந்துவந்தாள். இவளுடைய கிருதுவான பாங்கு, வாலிபம், திரவியம் என்பவையெல்லாம் மட்டற்றவாழ்வுக்கு இடமாயிருந்தபடியினுலே, இதுவே மெய், இதைவிட வேறே உலகம் இல்லை என்றுற்போலக் காலங் கழித்துவந்தாள். இப்படியிருக்கையில் இவளுடைய தோழி ஒருத்தியின் கேள்விக்காக ஒருநாட் சாயந்தரம் அவ்விடத்திற் கோவிலொன்றுக்குப் போனுள். பராபரனுடைய ஆவியானவர் அவள் இருதயத்தில் உணர்ச்சியை உண்டுபண்ணி ஏவினதினுலே தன் பாவக் குற்றத்தைக்குறித்துக் கலக்கமும் விசனமும் அடைந்தாள். அதுசெய்தி அவள் பெற்றுருக்குத் தெரியவந்தபோழுது அவர்கள் ஐயையோ! எங்கள் அதிருபவதியாகிய மகள் தேவதியான சிந்தனையினுலே ஞான அறிவுகொண்டு உலகநடைக்கேற்ற தனது ஒய்யாரங்களை எல்லாம் வெறுத்துத் தள்ளிப்போடப் போகிருளே என்று ஏங்கிக் கலங்கி அவளை உலகமார்க்கத்திலே திருப்பிக்கொள்ளும்படியாகக் கற்பித்தும், பின்பு வேண்டுதல்பண்ணியும் பார்த்தார்கள். மேலும் அவளுடைய முந்தின் கூட்டாளிப்பெண்களும் மற்றும் உறவரும் வந்து அவளைத் தங்கள்போங்கிலே திருப்பிக்கொள்ள யோசனைபண்ணித் தெண்டித்தும் மனிதத்துவத்துக்குமேற்பட்ட தத்துவம் ஒன்று அவள் இருதயத்தில் நின்று பலப்படுத்தினதினுலே அவளுடைய மனப்பிடி தளம்பினதில்லை. கடசியிலே அவளுடைய பெற்றுர், அந்தப் பட்டினமெங்குந் தேடுதற்கரிய விலையுயர்ந்த ஒருகூட்டம் உடுப்பைக் காட்டி, மகளே, நீ இன்னவிடத்திலிருக்கிற உண்டாட்டுவிருந்துக்கு வருவாயாகில் இதை உனக்கு வெகுமதி பண்ணுவோம் என்று கைக்கூலிபொருந்தி மயக்கினுர்கள். அதற்கு அவள் எடுபட்டு அந்த விருந்துக்குப்போய்த் திரும்பி வருகையில் முன்னுணர்ச்சிகள் சற்றுகுதல் இல்லாமல் அற்றுப்போயின. முழுமையும் உலகத்தவளாய் விட்டாள். பெற்றுரும் மகிழ்ந்தார்கள். ஆகிலும் அவர்களுடைய மகிழ்ச்சியுங் களிப்பும் நெடுநாவளக்கு இருந்ததில்லை. ஏனென்கில் அடுத்தகிழமையிலே அவளுக்கு மரணத்தறுவாய் வந்தது. கெட்டித்தனமுள்ள பல வயித்தியர்களை அழைத்துப் பார்ப்பித்த விடத்திலும் அவர்கள் எல்லாரும் இவள் தப்பிக்கொள்ளமாட்டாள் என்றே உத்தேசித்தார்கள்.

இதுசெய்தி அந்தப் பெண்ணுக்கு அறியவந்தபொழுது அவள் பேச்சுமூச்சற்றுச் சிறிதுநேரங் கிடந்தாள். அவ்வேளையில் அவளுடைய ஆத்மா, சென்றுபோனவைகளை எண்ணிப் பயங்கரப்படத்தக்க மறுமையையுங் கவனித்துக் கொண்டிருந்ததாகத் தோன்றிற்று. பின்பு அவள் அருண்டு புரண்டு தன் பெற்றுர் தனக்குவெகுமதிகொடுத்த அந்த உடுப்பை எடுத்து வந்து தான் படுத்திருக்கிற கட்டிலிற் குற்றுக்காலிலே தூக்கிவிடச்சொல்லி வேலைகாரி ஒருத்தியை ஏவ அவளும் அந்தப்பிரகாரஞ் செய்தாள். அதன்பின்பு தன்பெற்றுரையம் அழைப்பித்தாள். அவர்களும் வந்து கண்ணீர்விட்டழுதுகொண்டு துக்கசாகரத்தில் அழுந்தினவர்களாய் பக்கத்திலே நின்றுர்கள். அந்நேரம் அவள், இருவரையுந் தனித்தனியே உற்றுப்பார்த்து, தன் கையினுலே அந்த உடுப்பையுங் காட்டி என் தகப்பனுரே, என் தாயாரே, எனது ஆத்மாவின் விலைக்கிரயம், அதோ இருக்கின்றது கண்டுகொள்ளுங்கள். என்று மகா பயங்கரத்துடனேயுஞ் சலிப்புடனேயுஞ் சொன்னுள்.

ஆ! இதெவ்வளவு அபலமான செய்கை! விலைமதிப்புக்கடங்காத ஆத்மாவை அதின் தத்துவங்கள், மேன்மைகள், நம்பிக்கைகள், விருப்பங்கள், யாவற்றுடனேயுங் கூட ஓர் உடுப்புக்காகக் கிரயம்பண்ணிப்போடுகிறது மகா அபலந்தானே.

இத்தை வாசிக்குஞ் சினேகிதர்களே, நீங்கள் ஆராயிருந்தாலுஞ் சரி, உங்கள் ஆத்மாவை என்னென்னத்துக்காகக் கிரயம்பண்ணுகிறீர்களென்று யோசனைபண்ணிப் பாருங்கள். உங்களிற் சிலர் அதைப் பெரியோர் நட்புக்காகவும், குலத்துக்காகவும், சீதனம், முதுசொம், தேட்டத்துக்காகவும், அழகு, சங்கை, உத்தியோகம் என்பவற்றுக்காகவும், குடிவெறி சிற்றின்பத்துக்காகவும், கிரயம்பண்ணிப்போடுகிறீர்களே. இதெவ்வளவு அபலமென்று உங்கள் சுயபுத்தியினுலும் மேலேகாட்டிய திருட்டாந்தத்தினுலும் கண்டுணர்ந்து நல்லறிவுகற்று, உங்கள் ஆத்மா கடவுளிடத்திலே சேர்ந்து சத்தியவாழ்வு பெறும்படி நடவுங்கள். அல்லாது இம்மைக்கும் மறுமைக்குந் தீராத மனஸ்தாபம் வந்துசேருமென்று அறிவீர்களாக.

### *வண்ணைநகர்மாணுக்கர்களுக்கோர்புத்தி.*

தாரகையே, இதற்குத் தயவுசெய்வாயாக.

வண்ணைநகரில் வசிக்கும் வாலிபரே, உங்களில் அனேகருடைய வாலிப சேட்டைகளையும் பொல்லாப்புக்களையுங் குறித்துக் கவலையுள்ளவனுய் இருக்கிறேன். நீவிர் யாழ்ப்பாணத்தின் மற்றுமேனைய குறிச்சிகளிலும்பார்க்கச் சீர்திருந்திய வண்ணைநகரில் வசிக்கிறீர்கள். அனேக நாட்டுப் பிள்ளைகள் பெருத நன்மைகள் உங்களுக்குண்டு. உங்கள் பெற்றுரில் தரித்திரரானவர்களும் நாட்டுப்பகுதியிற் செல்வர்கள் தங்கள் பிள்ளைகளுக்காய்ச் செலவழிப்பதிலுங் கூடச் செலவழித்து, உங்களை மேன்மைப்படுத்த முயல்கிருர்களே. உங்களில் அனேகர் வெகுபணச்செலவோடு தமிழும் இங்கிலீசுங் கற்றீர்களே. நீங்கள் வெகுகாலம் கக்கத்திற் பொஸ்தகம் இடுக்கினவர்களாய் (கோபுரந்தாங்கிய பதுமைபோற்) பள்ளிக்குப்போகிறதைக் கண்டு உங்கள் பின்னிலை எப்படி இருக்குமென அபேட்சையோடுங் காத்திருந்தேன். சினேகிதர்களே, உங்கள் கூரியபுத்திஊருக்கு வெத நன்மைகளை உண்டாக்கு[illegible]ன யோசித்தேன். ஐயோ! என் நம்பிக்கை கெட்டது. உங்களாற் தேசம் கெட்டுப் போயிற்று. உங்கள் சவுந்தரியமுஞ் சங்கமங்கலவேட்டியுடையும் நீர்க்காவியேறின முண்டுபரவிய நடையும் உங்கள் நன்மையைக் காத்திருந்தவெம்போலிகட்குத் துன்பத்தையும் தாசிகளுக்கு இன்பத்தையும் உண்டாக்கிற்று? ஐயோ! நீவிர் படித்த கல்வியும் பயின்ற எழுத்தும் தேர்ச்சிக்காய்ச் சம்பாதித்த கடதாசிகளும் தாசிகள்சிறப்பையா கூறுகின்றன? நீவிர் பிற்காலங்களில் பிரசித்த சங்கங்களைவைத்து அனேக காரியங்களைப் பேசுவீர்களென்றுங் கற்றுத் தேறுவீர்களென்றுங் காத்திருந்தேனே? நீவிர் இப்போ கூடுங் கூட்டங்களெல்லாந் தாசிகள் நன்மைக்காக உண்டாகின்றதே! நீவிர் பிரசித்த பத்திரிகைகளில் அறிவுக்கேதுவானவைகளை எழுதுவீர்களெனவெண்ணியிருந்தேன். நீங்களோ ஒருவர்மேலொருவர் அவதூறுனவைகளை எழுதித் தெருக்கள்தோறும் பரப்புகிறீர்கள். நீங்கள் இங்கிலீசுபடித்தால் சங்கையான உத்தியோகங்களைப் பார்ப்பீர்களென நினைந்தேன். உங்கள் உத்தியோகம் இப்போ தாசிகளால் நியமிக்கப்படுகின்றதே. நீங்கள் கற்றஅறிவால் தாசிகளுக்கு நல்ல இங்கிலீசுப்பேரைக் கொடுக்கிறீர்கள். ஒருவருக்கொருவரும் சூட்டுகிறீர்கள். பகுதி பகுதியாய்ப் பிரிந்து சண்டைசெய்கிறீர்கள். காசுகொடுத்து அரக்கனைவாங்கி ஒருவனுக்குக்கொடுத்து மற்றவனை அடிக்கச் செய்கிறீர்கள். உங்கள் நாமங்கள் நீதவான் காதுகளில் எறிப் பருக்கன் தாளிலும் பதியப்படுகின்றது. உங்களிற் சிலர் நியாயப்பிரசாரம் பெற்ற உத்தியோகங்களும் பறிகொடுத்துக் கடைசியில் முழுதும் தாசிவீடுதூங்கப் போகிறீர்கள். ஐயோ சினேகிதர்களே! உங்களை நினைக்கும்போது என்இருதயங் கலங்குகின்றது. நீங்கள் இம்மையிலிழந்த சரீரத்திற்கும் சங்கைக்கும் நல்வாழ்வுக்கும் மாத்திரமோ மறுமையிலிழக்கப்போகிற விலையுயர்ந்த ஆத்துமத்துக்குமாய்க் கவலைப்படுகிறேன். இவைகள் எப்படியாயிற்றென்று பாருங்கள். உங்களோடு படித்தவர்களில் அனேகர் கிரேஸ்தராய்ச் சற்குணராய் நல்லவர்களாய் யாவராலும் மதிக்கப்பட்டிருக்கிருர்களே? உங்களுக்குவந்த தாட்சியென்ன? நன்மைக்காய்ப் பயிற்றப்பட்ட நும்மை தின்மையில் அதிகரிக்கச் செய்தவனுர்? உங்கள் தேவனுகிய பசாசே உலகத்தின் பிரபுவே. நீங்கள் சிவன்கோயில் கந்தசுவாமிகோயிலென்னும் நரகவீடுகளையும் கொக்கோகம் மதனநூல்முதலிய சைவநூல்களையும் பிராமணர் சைவர்முதலான பசாசின் மக்களையும் பிரதானமாய் உங்கள் கெட்டமாமிச இச்சையையும் விட்டு விவிலியவைப்பற்றி வேதத்தைக் கற்று மிசியோனரிகள் கோயிலுக்குப் போய் அவர்கள் புத்தியைக் கேட்டு மெய்த்தேவனை வழிபட்டு "இரட்சிக்கப்படுவதற்கு என்னசெய்வோம்? என்று கதறுங்கள். சினேகிதரே, இப்படியேமாத்திரஞ் செய்தால் இயேசுக்கிறிஸ்துவின் மூலமாய் இரடசிக்கப்படுவீர்கள். உங்களுக்குச் சகல மேன்மையும் ஆசீர்பாதமுமுண்டாகும். இல்லாவிடிற் கெடுவீர்கள். சினேகிதரே, என் முழக்கருத்தையும் நோக்கத்தையும் ஒன்றிலெழுதமுடியாது தாரகையே,

இன்னமுங் கதைமெத்த உண்டும்பெண்ணே இனிவருந் தாரகைக்கு எழுதுவேனே எழுதுவேனே.

இப்படிக்கு, தங்கள் பணிவிடைகாரன்
௲அ௱௫௰க ம் ௵. } வண்வணநகர் ஓர்
மாசி மீ. ௰௩ ௨. } மாணுக்கன்.

---

யாழ்ப்பாணத்தில் றோமான்குரு ௲அ௱௫௰ ம். ஆண்டு எழுதிய இறப்போடுத்து.

நமது புதினப்பத்திரிகையில் இச் சிறுபுத்தகத்தைப்பற்றி விபரமாய் எழுதி அறிவிக்க இடம்பெறுது. மிகவுந் தகுதியான ஒருவர் அதைச் சீக்கிரத்தில் பார்வையிடுவாரென்று நாமெண்ணுகிறோம். இச்சிறுபுத்தகத்தில் எங்கள் தாரகையைப்பற்றி அவர்கள் சொல்லியிருப்பதினால் அதற்குபசாரமாய் நாமுஞ் சிறிதுகாரியங்களை இவ்விடத்தில் அறிவிக்க உடன்பட்டிருக்கிறோம். உரோமான் மதத்தவர்கள் பிறோத்தேஸ்த்தாந்துக் கிறிஸ்தவர்களாகிய நமக்கு விரோதமாய் எழுதும்வேளைகளில் கொண்டிருக்கும் திற்குணத்துடனே இத்தை எழுதி யிருக்கிறார்கள். விசுப்புவானவர் எங்கள் பத்திரிகையின் பேரில் சாபங்கூறிக் கத்தோலிக்கர் அத்தை வாசியாதபடி கற்பித்திருக்கிறார். இந்தக்குணம் அவர்களில் தோன்றுமென்று நாம் காத்திராத காரியமல்ல. இப்படியே விசுப்புவானவர் கோடுத்தகட்டளை நமக்கு அதிக கனமென்று எண்ணுகிறோம். புறோத்தேஸ்தாந்து மதத்தவர்களாகிய எங்களுடைய விவிலியவேதத்தை வாசிக்கப்படாதென்று [illegible]து-எங்கள் தாரகையையும் அந்தவகையில் வைத்திருக்கிறாரே. ஆகிலும் வேதத்தையும் தாரகையையும் அவர் பட்சத்தவர்களில் அனேகரை வாசியாதபடி தடைசெய்ய அவருக்கு அதிகாரமுண்டென்பதைப் பற்றி மிகவுஞ் சந்தேகிக்கிறோம். விசுப்புவானவர் தடைசெய்தும் நமது தாரகை பிரவையைக் கோடுத்து நிலைகொண்டு வருமென்பது இன்னம் அவரெழுதிய இறப்போடுத்தில்சிலபகுதியில் நற்காரியங்கள் எழுதப்பட்டிருப்பதைக் குறித்துச் சந்தோஷத்தோடே வியந்துகொள்ளுகிறோம். புத்தகத்தின் கடைசியில் றோமான்கிறிஸ்தவர்கள் பரிசுத்த நடையுள்ளவர்களாகவும் கத்தராகிய இயேசுக்கிறிஸ்துவினுடைய முன்மாதிரியைப் பின்பற்றுகிறவர்களாகவும் வரும்படியான எச்சரிப்புக்கள் அடங்கியிருக்கின்றன. அதிற் சிலபுறங்களில் நாமும் கத்தோலிக்கரும் மெத்தச் கவனமாய் வாசிக்கத்தக்க மேன்மையான புத்திபோதனைகள் காணப்பட்டிருக்கின்றன.

இவ்விடத்தில் நியாயமெடுத்துப் பேசப்பட்டுவரும் போதனைகளைக் குறித்தும் நாம் வியந்துகொள்ள விரும்புகிறோம். அவைகளிற் சிலதைக்குறித்து மாத்திரம் சிலகவனிப்பைச் சொல்லுகிறோம்.

௧ வது. ஆற்றும இரட்சண்ணியந் தங்கள் மதத்தவர்களுக்கு மாத்திரமல்லவென்று போதிக்கிறார்கள். ஆனால் டாக்குத்தர் மில்னர் என்பவர் கத்தோலிக்கச் சபையில்லாமல் மற்றும்படி ஆற்றும இரட்சிப்பில்லையென்று சொல்லி மார்க்க விரோதிகளாகிய எங்களை உத்தரிக்கும் ஸ்தலத்தின் சுத்தம்பண்ணும் அக்கினிச் சுவாலையிலும் பார்க்கக் கேடான ஒன்றுக்கு கையளிக்கிறார்.

௨ வது. சுரூபாராதனையைப்பற்றி விக்கிரகாராதனைக்காரராகிய சைவரில் விவேகிகள் தங்கள் சுரூபாராதனையைக் குற்றமற்றதாக்கும்பொருட்டு றோமான் மதத்தவர்கள் சொல்லும் நியாயத்தையே சொல்லிவருகிறார்கள்.

௩ வது. விவிலிய வேதத்தைப் பிரபலியப்படுத்துவதற்குத் தாங்களுஞ் சம்மதிகாரராயிருக்கிறார்களென்பதை நாங்கள் நம்பும்படிபண்ணத் தெண்டிப்போமென்பது, இதன்பேரில் அவர்களுடைய சபைச் சரித்திரம், எக்காலத்திலும் எத்தலத்திலும் இக்காலம் வரைக்கும் மேற்சொல்லியபடி நடந்துவரவில்லையென்பதற்குப்போதிய நியாயமிருக்கின்றது. வேதத்தை மூல்பாடைகளில் வாசியாதபடிக்கு அல்லது பரம்பாதபடிக்குத் தாங்கள் ஒருகாலத்திலுந் தடைசெய்யவில்லையென்று இவ்விறப்போடுத்தின், ௬ ம். பக்கத்தில் எழுதியிருக்கிறார்கள். சீனம், யாப்பான், இந்தியா முதலிய தேசங்களில் எத்தனை கோடாகோடிபேர் வேதத்தை மூல்பாஷையாகிய எபிரேயப்பாஷையிலுங் கிரேக்கபாஷையிலும் வாசிக்கக்கூடுமென்று சுபாபஅறிவுள்ள யாரும் அறியலாம். யார்அதை அவர்களுக்குப் போதிப்பார்? இது நாம் பயப்படவேண்டிய நிந்தனை யல்லவா? அநேக நூறுண்டுகளாக றோமானுசபை அநேக இடங்களில் அநேக மிசியோனரிகளைக் கொண்டிருந்தார்களே, அவர்கள் அந்தந்தச் சனங்கள் பேசிவரும் பாஷைகளில் ஏன்வேதாகமத்தைத் திருப்பிக்கொள்ளவில்லை. அவர்கள் இப்பொழுது வேதாகமத்தை வைத்திருக்கும் இலத்தீன் பாஷை மூலபாஷைகளில் ஒன்றல்லவே? அவர்கள், சனங்கள் அறிவீனராகவும் அந்தகாரத்தில் உட்பட்டுக் குருமாருக்குக் கீழமைச்சலாக இருக்கவும் விரும்புகிறார்கள்.

௪ வது. கன்னிமரியாவளைத் தேவமாதாவென்று சொல்லி அவளை வணங்குகிறார்கள். கன்னிமரியாள் கத்தராகிய இயேசுக்கிறிஸ்துவுக்கு மனுஷீகத்தின்படி மாதாவேயன்றித் தேவனுக்கு அன்னையும் பிதாவுமேது? வேதத்தை வாசிக்கும்படி குருமார் உத்தரவுபண்ணினால் கத்தோலிக்கர் இதுகாரியத்தை நன்குணருவார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதின்நிருபத்தில், பராபரன் ஒருவரே, பராபரனுக்கும் மனிதருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கோடுத்த மனிதனாகிய கிறிஸ்துயேசு அவரே என்பதையும் அவர்கள் வாசித்தறிவார்கள். இதை அறிந்துகொண்டால் வேறு மத்தியஸ்தர் தேவையென்றெண்ணார்கள்.

நேரமிருந்தால் பின்வருஞ் சஞ்சிகைகளில் வேறுசில காரியங்களைப் பற்றிச் சொல்லுவோம்.

---

## உ த ய தா ர கை.

௲அ௱௫௰க ௵ பங்குனி ௰௩ ௨.

---

### இலங்கை மதுபானவிலக்கு.

மேற்சொல்லிய நாமத்தையுடைய ஓர் மேலானவும் பிரயோசனமானவுந் துண்டுப்புத்தகங் கண்டியிலிருந்து எங்களுக்கு அனுப்பப்பட்டது. அது மதுபானத்தைப்பற்றி அநேக சங்கதிகளை விளக்குகிறதாகவுஞ் சகல சனங்களாலும் பிரதானமாய் இத்தீவின் அதிகாரிகளாலுங் கவனிக்கப்படவேண்டியதாயும் இருக்கின்றது. மேற்சொல்லிய அதிகாரிகளும் மதுபானவிருத்தியால் அல்லது, இத்தீவின் சகல பகுதிகளிலுஞ் சாராயங் கள்ளு முதலியமதுக்களைச் சாவடிகளில்வைத்து விற்க உத்தரவுபண்ணுகிறதினால் உண்டாகும் மோசத்தைப்பற்றிய குற்றந் தங்களில் சாடாமல் போகாதென்பதைச் சீக்கிரத்தில் தெளிவாய்க் காண்பார்கள்.

மேலும் இத்தீவின் நடுமாகாணந் தென்மாகாணங்களில் குடிவெறியை அகற்றிப்போடுபடி சிலர் தெண்டிக்கிறார்களென்றும் அவர்கள் தெண்டிமைக்குத் தக்கதாய்ச் சித்தியடைகிறார்களென்றும் நாங்கேள்விப்பட்டதால் அதிகசந்தோஷப்படுகிறோம். மதுபான விலக்கைப்பற்றிச் சில சிறுப் புத்தகங்களை உண்டுபண்ணி இங்கிலீசிலும் அந்தந்த ஊர்ப்பாஷைகளிலும் அச்சுப்போட்டு ஊருக்குள் பரப்புவதற்குப் போதிய பணமில்லாமல் முட்டுப்படுகிறார்களென்று கேள்விப்பட்டபடியால், யாழ்ப்பாணம் அமெரிக்கன் மிசியோனரிமாராகிய நாங்கள், இவ்வூரிலிருக்கும் நல்லுபகாரிகள் இந்த நன்முகாந்திரத்திற்காக ஏதேனுங்கொடுத்தால் தென்மாகாணத்திலிருந்து பிரயாசப்படுகிற அவர்களுக்கனுப்பச் சித்தமாய் இருக்கிறோமென்பதை உங்களுக்கு அறிவிக்கிறோம். அவர்கள் தங்கள் முயற்சியில் அதிக அனுகூலத்தை அடையவேண்டுமென்ற முழு விருப்பத்துடன் இருக்கிறோம்.

---

### பாப்புவின் பிரதானகுழப்பம்.

இத்தாலிதேசத்திலும் பிரதானமாய் உரோமைபுரியிலும் இக்காலத்து நிகழ்ந்துவருஞ் சண்டையில் பாப்புவானவர் சத்தியவிவிலிய வேதாகமத்தின்மேற் கொண்டிருக்கும் பகையே அதிகம் முக்கியமான காரியமாய் இருக்கின்றது. வேதாகமத்தைப்போலப் பாப்புவுக்கு அதிக திகிலைக்கொடுக்குஞ் சத்துரு வேறில்லை. பாப்புவுங் காடினல்மாரும், விவிலிய வேதத்தைச் சனங்கள் மறைவாக வைத்திருப்பதைத்தானும் விடுமட்டாக, தானும் மோசமின்றி இருக்கிறோமென்றெண்ணவரகுதல் ஆரோக்கியமாய் நித்திரைசெய்யவாகுதல் கூடியதாய் இருக்கவில்லை. பாப்புவானவர், இத்தாலியிலுள்ள விசுப்புக்களுக்கும் சிரேஷடகுருவாகிய ஆட்சுவிசுப்புக்கும் எழுதிய ஓர்பத்திரத்தில், விவிலியவேதாகமம் ஊருக்குள்ளே பரம்பிவருகிறதிலே தனக்கிருக்கும் பகையை வெளிப்படுத்தி எழுதுகிறதென்னவெனில், பிரசித்த சமாசார பத்திரிகைகளைச் சனங்கள் வாசிப்பதைத் தடுக்கிறதுமாத்திரமல்லச் சபையின் சத்துருக்களும் மனுஷ சாதியாருடைய நன்மையை விரும்பாதவர்களும், வேதாகம சங்கத்தினது உதவியைக்கொண்டு வெட்கமின்றிச் சனங்களுக்குள் பரப்பிவரும் விவிலியவேதாகமத்தை வாசியாதபடி நீங்கள் நீக்கி, விசுவாசிகளாய் இருப்பவர்களுக்கு மரண நஞ்சாகிய விவிலியவேதத்தை வாசியாதபடி அருவருப்புடன் தள்ளிப்போடும்படி எச்சரித்து, சம்பேதுருவின் பரிசுத்த கட்டளைக்கு வணக்கஞ் செலுத்தும்படி போதியுங்கள்.

வேதாகமத்துடன்பண்ணும் இந்தச் சண்டையில் பாப்புவானவர் மோட்சத்துக்குரிய படைகளை எதிர்ப்பது வருத்தமெனச் சந்தேகமின்றி அறியவருவதுமன்றி அந்தச் சின்னப் புத்தகந்தான் பாப்புவிலுங் காடினல்மாரிலும் அதிக பெலனுள்ளதென்றுகண்டு, கடசியாய் அதுசகல தடைகளையும் வென்று தின்னை அகற்றும்படி தெண்டிக்கும் நிற்பந்த கிழவனான பாப்புவுக்கும் நியாயந்தீர்க்க வரும்.

---

### அமேரிக்காவின் சனத்தொகைவிருத்தி.

அமரிக்காக்கண்டத்துக் குடிசனத்தொகை வருடத்திற்குவருடம் அதிக விருத்திப்பட்டு வருகுதென்பதற்கு உதாரணமாக நியுயோர்க்குப் பட்டினத்தைப் பாருங்கள். அதிற் பிறகிட்ட, ௮௱௨௰ம் ஆண்டில், ௧. இலட்சத்து ௨௰௩௲ சனமுண்டு. இப்பொழுதோ ௭. இலட்சத்து ௫௰௲. சனமளவுக்கதிகப்பட்டது. ஏரோப்பைக்கண்டத்தில் இரண்டு பெரிய பட்டினங்கள்மாத்திரம் உண்டு. பத்துவருடத்துக்குள்ளே அந்தவீதமாய் அது பேரீஸ்நகரியிலும் பெரிதாயிருக்கும். இன்றுமுதலாயாக முப்பதுவருடத்துக்குள்ளே லொங்தோம்பட்டினத்திலும் நியூயோர்க்கு நகரி அதிக பெரிதாய்ப்போய்விடும். ௮௱௰ம் ஆண்டில், சம்லூவிஸ் என்னும் நகரியில், ௲௩௱. சனம்மாத்திரம் உண்டு. இப்பொழுதோ அதில், ௩0௲. சனமுண்டு. பின்னை இவ்விதமாய்ப் பார்க்கில், ஐக்கதேசத்தடங்கிய, ௩௧. இராச்சியத்திலுமுள்ள சனங்கள், ௨. கோடியே, ௫௰. இலட்சங்காணவேணும். அ௱௫௰ம் ஆண்டில் அவ்விடத்துச் சனம், ௫௰. இலட்சம். ௲௯௱ம் ஆண்டில், ௧. கோடியே, ௭௰. இலட்சம். அதாவது பத்துவருடத்திற்கு நூற்றுக்கு முப்பத்துமூன்றாக அதிகப்படுகின்றது. இவ்வீதமாய்க் கணக்கிடுகில், ௫௰ம் ஆண்டில் சனம், ௨. கோடியே ௨௰. இலட்சம். அமேரிக்கா முதற்றரமானஇராச்சியமாயிருக்கிறதுமாத்திரமல்ல, அவ்விடத்தில் ஊர்க்குழப்பமில்லாதிருக்கில் எல்லாவற்றிலும் பெரிய தேசமாய்விடும். இவ்வீதமாய் அன்பது வருடத்திற்குப் பெருகிப்பெருகிவருகில்அப்பொழுது ௰௩. கோடிசனத்துக்கதிகப்படும். அதாவது கிட்டத்தட்ட ஏரோப்பைக்கண்ட முழுதிலுமுள்ள சனமளவுக்குச் சரியாய்வரும். இன்னும் அன்பதுவருடத்திற்கு இவ்வீதமாய் அதிகப்பட்டுப் பெருகிவருகில், ௨௩௱. ஆண்டிலுள்ள சனம், ௩௬. கோடியே ௬௰. இலட்சம் இருக்கும். ஐக்கிய சண்டமானது இங்கிலாந்தராட்சியை விட்டுப்பிரிந்தபோது அவ்விடத்துச் சனம் ஏறக்குறைய, ௩௰. இலக்கமுண்டு. பத்துவருடத்திற்குள்ளே பிரன்ஸ் அல்லது, ஒஸ்திறியா என்னுந் தேசங்களிலுள்ள சனமளவுக்குவந்துவிடும். இப்படிப் பலுகிப்பெருகுவதற்கு ஒரு எல்லையிருக்கிறதைக் காணவில்லை. மிசிசிப்பை என்னும் நதியிலுள்ள பள்ளத்தாக்குமாத்திரம் ஏரோப்பைச்சனம் முழுவதையும் தாபரிக்கும். அந்தப்பள்ளத்தாக்கில் இப்பொழுதுள்ள சனம், ௧. கோடியே ௩௰. இலட்சம்.

---

### பிரதேசசமாசாரம்.

இங்கிலாந்து.—டாக்குத்தர் உவைஸ்மன் என்பவரைப்பாப்புவானவர் காடினல்என்னும் உத்தியோகஸ்தனாக நியமித்ததின்நிமித்தம் பாப்புவுக்கும் இங்கிலாந்தாருக்கும் வரவுவாயிருந்த வில்லங்கம் இப்பொழுது படிப்படியாய் ஆறிப்போயிற்று. காரியத்துக்குத்தக்கதாகச் சிறிது ஒழுங்குப் பிரமாணங்களைப் பாளிமேந்தென்னும் மந்திராலோசனைச் சங்கத்தார் சீக்கிரம் உண்டாக்குவார்களென்று சனங்களும் நம்பியிருக்கிறார்கள்.

பிறன்ஸ்.—கோல்ஸ்றீன் என்னும் இடத்தில் உண்டான யுத்தம் இப்பொழுது நின்றுபோனதுமன்றித் தென்மார்க்கருக்குஞ் சருமானியாருக்கும் இடையே உண்டுபட்டிருந்த வில்லங்கங்களும் இராசிப்பட்டுப் போயின.

இஸ்பேன்.—நாவேஸ் என்னும் பெயரையுடைய முதன்மந்திரி தமது உத்தியோகந் தமக்கு வேண்டாமென்று சொல்லி இராச்சியத்தையும் விட்டுப் போய்விட்டார். படைத்தலைவனாகிய வெம்என்பவரும் இஸ்லாமதத்தை அனுசரிக்கிறவராய் இறந்துபோய் அம்மதத்துச் சுத்தவாளனொருவரை வைத்த கல்லறையில் துருக்கருடைய ஆசாரமுறைப்படி அடக்கம்பண்ணப்பட்டார். துருக்கதேசத்திலிருந்த மறியற்காரரெல்லாரும் விடுதலையாக்கப்பட ஏதுவாய் இருக்கிறார்கள்.

---

மோசகாலத்தில் மனிதர் மறுவேளையிலும்பார்க்க அதிகமாகக் கடவுள் திருச்சமுகத்தை வேண்டிநிற்கிறார்கள். முன் ஒருக்காலுஞ் செபம்பண்ணாத அனேகர் செபம்பண்ணுகிறார்கள். உத்தமர்கள் பண்ணுஞ் செபந்தானும் வழமையிலும் அதிகம் அனலுள்ளதாயிருக்கும்.

# MORNING STAR.

## Jaffna, March 13th, 1851.

The first Report of the Vicariate Apostolic of Jaffna, for the year 1850.

We have not room for a lengthened notice of this pamphlet in our little luminary. We think it probable, however, that it will shortly be reviewed by a more able hand. As our humble paper is noticed in the Report, we feel bound in courtesy to say a few words respecting this pamphlet. It is written with a very *bad spirit*—the old stereotyped spirit of Romanism whenever they write against protestants. The Bishop has seen fit to anathematize our paper, and to forbid all the Roman catholics of Jaffna from reading it This is no more than we expected from such a quarter. We feel highly honored by this order of the Bishop. He has thus placed our paper under the same ban with the protestant Bible. We very much doubt however, whether he has power to prevent many of his people from reading both the Bible and the Morning Star. It is certainly possible also that the latter may continue to shine a little longer, notwithstanding this prohibition of the Bishop.

We are happy to be able to commend some parts of the Report. In the "conclusion," where they exhort their people to holiness of life—to imitate the perfect example of our Lord Jesus Christ, there are several pages that are truly excellent and worthy of an attentive perusal by all whether catholics or protestants.

We wish that we could also commend the doctrines that are here advocated. We have only room however, for brief remarks upon a few.

1. They deny "holding the doctrine of exclusive salvation with which they are charged by protestants." But in the work of Dr. Milner entitled "the end of controversy," which we lately read, he distinctly asserts that there is no salvation out of the catholic church, thus consigning all of us poor heretics to some thing worse than the purifying fires of the *auto da fe* or of purgatory

2. The adoration of images.

We will only say on this point, that intelligent heathen use precisely the same mode of reasoning to justify the use of images in their temples that Roman catholics do in their churches.

3. They would attempt to make us believe that they are friendly to the circulation and reading of the holy scriptures. But the history of their church in every age and in every country, down to the present time, abundantly proves that this is not so. They here say, page 95, "The catholic church has never forbidden or discouraged the reading or the circulation of authentic copies of the sacred scriptures, in the *original languages.*" We would like to ask the author of this Report, how the millions of China and Japan and India are to read the Bible in Hebrew and Greek? Who are to be their teachers? Is not this solemn mockery? The Roman catholics have had extensive missions in all these countries for several hundred years. Why has not their church prepared an authorized version of the scriptures in the languages of the people? They have one in Latin, which is not one of the original languages of the Bible. Why have they not made them in other languages? To all men of common sense, the reason is obvious. They wish to keep the common people in ignorance, in darkness and in subjection to the priests.

4. They call the virgin Mary the *mother of God*, and pay her divine honors.

The virgin Mary is the mother of our Lord Jesus Christ. God has neither father nor mother; and if common people were allowed to read their Bibles, they would understand this. They would also read and understand the truth of what St. Paul says to Timothy, "For there is one God, and one mediator between God and men, the man Christ Jesus." Understanding this, they would not feel the need of other intercessors.

If we have time, we may remark upon some other points in future numbers of the Star.

---

There are only three ways to get out of a quarrel; write out, fight out, or back out; but the best way is to keep out.

---

SECESSIONS FROM ROMANISM.

Roman Catholics are constantly boasting of the number of converts from Protestantism to Romanism. No doubt there have within a few years been a considerable number of such especially from the Puseyites in the English Church and some in America. But on the other hand they say little or nothing of the great numbers of converts among the common people from Romanism to Protestantism. These are very numerous especially in the United States. Some of the Irish, and great numbers of Germans, have seceded from Rome and joined the Protestants. Thus while they gain one convert, they loose twenty from their church. In Europe, by the aid of the inquisition and the civil power, they are able to retain most of their people in subjection to the Pope. But when they have immigrated to the United States, they soon learn that they are free men and not slaves. Their children especially attend school and read their Bibles and learn to think for themselves. The result is, that they cannot there long be kept in abject subjection to their priests. As they become better acquainted with Protestants and with their Bibles, we may reasonably expect that they will in still greater numbers, forsake the superstitions of Rome and become Bible Christians. We copy the following article from the New York Evangelist as illustrative of our meaning:

The Philadelphia papers contain a notice of the organization of a new German church in that city, composed of a number of Catholic German families, who have openly seceded from the Roman hierarchy. These instances of secession have become quite frequent, and as the influences of our free Protestantism are felt, will become very much the fashion of the emigrants, particularly the Germans. In Cinninnati, the Editor of the Louisville Herald states, there are already seven of these communions, some Reformed, others Evangelical, and all Independent. They receive the Scriptures as the rule of faith, and many have the appearance of truly converted persons. All the churches have pastors, four of whom are regarded as Rationalists, and the other three as Evangelical and highly exemplary. In other cities the same is true—probably in most of the larger cities, there is more or less of this distinative secession from Rome. What with these refractory emigrants, and the universal tendency of the children of Catholics to think for themselves, the prospects of Popery in this land are not so bright as to discourage Protestant labor and prayer for their good. The field which is thus opening before the church, is exceeding broad and promising.

---

Intemperance in Ceylon.—This is the title of a very interesting and valuable tract sent us from Kandy. It discloses a vast body of facts upon this subject which ought to be attentively considered by all—especially by all in authority in this island. They will clearly see that they cannot innocently remain unconcerned spectators of the desolating evils of intemperance, especially of the evils arising from licensing taverns for the sale of arrack and toddy in every part of the island.

